(1) (F)

LIBRARY ★ GOVERNMENT LAW COLLEGE, TRICHY ★ 15 MAY 2023

Register No. [ ]

**FA6A**

5395–22

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

CONSTITUTIONAL LAW – II

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Evaluate the Financial Relations between the union and the states.

   மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையிலான நிதி உறவுகளை மதிப்பிடுக.

2. Critically examine the laws relating to the appointments and transfer of judges of Supreme Court and High Courts of India with relevant case laws?

   இந்திய உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் நியமனங்கள் மற்றும் இடமாற்றம் தொடர்பான சட்டங்களை, தொடர்புடைய வழக்குகளுடன் கூர்ந்தாய்வு செய்க.

3. Discuss the historical and legal perspectives of Parliamentary Privileges in India.

   சட்டம் மற்றும் வரலாற்று நோக்கில் இந்திய நாடாளுமன்றச் சிறப்புரிமைகளை விவாதிக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Examine the writ jurisdiction of the High Courts under the Constitution of India.

   இந்திய அரசமைப்பின் கீழ் உயர்நீதிமன்றங்களின் நீதிப் பேராணை அதிகார வரம்புகளை ஆய்வு செய்க.

5. Explain the circumstances under which Parliament can legislate law on state subjects.

   எந்தச் சூழ்நிலைகளில் மாநிலங்களுக்கான பட்டியல் மீது நாடாளுமன்றம் சட்டம் இயற்ற முடியும் என்பதை விளக்குக.

6. Explain the provisions relating to ordinance making power of the President.

   குடியரசுத் தலைவரின் அவசர சட்டமியற்றும் அதிகாரம் தொடர்பான விதிமுறைகளைப் பற்றி விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Theory of Basic Structure

அடிப்படை அமைப்பு கோட்பாடு

(b) Privileges of the President

குடியரசுத் தலைவரின் சிறப்புரிமைகள்

(c) Comptroller and Auditor General of India

இந்தியத் தலைமைக் கணக்கு மற்றும் தணிக்கைத் துறை தலைவர்

(d) Annual Financial Statement

ஆண்டு நிதி அறிக்கை

(e) Parliamentary Committees

பாராளுமன்ற குழுக்கள்

(f) Lok Sabha

மக்களவை

(g) Court of Record

பதிவு மற்றும் மதிப்புறுத்து நீதிமன்றம்

PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.**

8. 'A', an Executive Engineer in the service of the state of 'D' was placed under suspension on 22.05.2018 pending disciplinary proceedings alleging the commission of acts of misuse of power. An inquiry was initiated against him in this respect. At this juncture, the Government passed an order compulsorily retiring him with effect from 13.02.2019. 'A' challenged the constitutional validity of the order. Decide.

'அ', என்ற நிர்வாகப் பொறியாளர், 'இ' என்ற மாநில அரசுப்பணியில் பணியாற்றிய போது, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருக்கும்போது, 22.05.2018 அன்று பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். இதன் காரணமாக அவருக்கெதிராக ஒரு விசாரணை தொடங்கப்பட்டது. இந்த தருணத்தில் அரசானது 13.02.2019 அன்றிலிருந்து அவருக்கு கட்டாய ஓய்வு பெறுவதற்கான உத்தரவை பிறப்பித்தது. 'அ' இந்த உத்தரவின் அரசமைப்பு செல்லுந்தன்மையைக் குறித்து மறுப்பு தெரிவித்தார். தீர்மானிக்க.

9. 'A', who belongs to the state of Karnataka files a writ petition of 'Habeas Corpus' Under Article 226 before the High Court of Karnataka. But the petition was dismissed. Thereafter, 'A' approaches the Honourable Supreme Court of India with the same writ petition. Will 'A' succeed?

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த 'அ' என்பவர், ஷரத்து 226–ன் கீழ் ஒரு 'ஆட் கொணர்வு' நீதிப்பேராணை மனுவை கர்நாடகா உயர் நீதிமன்றத்தின் முன்பாக தாக்கல் செய்கிறார். ஆனால் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பிறகு 'அ', மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றத்தை அதே நீதிப்பேராணை மனுவுடன் நாடுகிறார். 'அ' வெற்றி பெறுவாரா?

10. Mr. 'X' was a member of Rajya Sabha. While he was the member of Rajya Sabha, the Government of State 'Z' appointed him as the Chairperson of 'Z' Film Development Council. Thereupon, Mr. 'X' accepted the office of Chairperson, which carried with it various pecuniary gain. In this juncture, the President of India, after obtaining opinion from the Election Commission issued an order disqualifying Mr. 'X' for being the member of Rajya Sabha. Decide.

திரு. 'இ' என்பவர் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தார். அவர் மாநிலங்களவை உறுப்பினராக இருந்த போது, 'உ' என்கிற மாநில அரசு 'உ' திரைப்பட மேம்பாட்டுக் குழுவின் தலைவராக அவரை நியமித்தது. பலவித பண ஆதாயங்களையுடைய அந்த தலைவர் பதவியை திரு. 'இ' ஏற்றுக் கொண்டார். இந்தத் தருணத்தில், இந்திய குடியரசுத் தலைவர், தேர்தல் ஆணையத்திடமிருந்து கருத்தை பெற்ற பிறகு, திரு. 'இ'.ஐ மாநிலங்களவை உறுப்பினராக இருப்பதிலிருந்து பதவி நீக்கம் செய்து உத்தரவு பிறப்பித்தார். தீர்மானிக்க.

---

(2)

**FA6B**

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 2023

Register No.

5396–22

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

COMPANY LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Narrate how is a company formed. Explain the position of a promoter inside the company.

   ஒரு நிறுவனம் எவ்வாறு தோற்றுவிக்கப்படும் என்பதை விவரிக்க. ஒரு நிறுவனத்தில் தோற்றுவிப்பாளரின் நிலை என்ன என்பதை விளக்குக.

2. What do you mean by the doctrine of Indoor Management? What are the exceptions to this doctrine? Illustrate with case law.

   உட்புற மேலாண்மைக் கோட்பாடு என்பதை பற்றி நீர் அறிவது என்ன? அக்கோட்பாட்டிற்குள்ள விதிவிலக்குகள் யாவை? அதை தகுந்த வழக்குகளுடன் விவரி.

3. Explain the term "debentures" and state the rights and remedies available to debenture holder.

   "கடனீட்டு ஆவணம்" என்னும் சொற்றொடருக்கு விளக்கமளித்து கடனீட்டு ஆவணதாரரின் உரிமைகள் மற்றும் தீர்வழிகளைப் பற்றி குறிப்பிடு.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the different kinds of share capital.

   பல்வேறு வகை பங்கு மூலதனம் பற்றி விளக்குக.

5. Directors occupy a pivotal position in the structure of a company – Explain.

"ஒரு நிறுமத்தின் மையமாக இயக்குநர்கள் அமைந்துள்ளனர்" – விளக்குக.

6. Discuss the powers and functions of the National Company Law Tribunal.

நாட்டு நிறுமச் சட்ட தீர்ப்பாயத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Corporate Social Responsibility.

நிறுவன சமூகப் பொறுப்பு.

(b) Floating charges

படரும் பற்றுப்பொறுப்பு

(c) Foss vs Harbottle

ஃபாஸ் எதிர் ஹார்பாட்டில்

(d) Statutory meeting

சட்ட வகைக் கூட்டம்

(e) Dividends

பங்கு ஆதாயம்

(f) Golden rule of prospectus

திட்ட அறிவிப்பின் பொன் விதி

(g) Powers and functions of SEBI.

'செபி'யின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mr. L incorporated an Airways Company of which he was the managing director. In that capacity he appointed himself as a Pilot. While on the business of the company he was lost in a flying accident. Can his widow recover compensation under the Employee's Compensation Act? Explain with the help of case-law.

திரு. எல். என்பவர் உருவாக்கிய விமான நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் அவர் ஆவார். அவர் தன்னையே விமானியாகவும் நியமித்துக் கொண்டார். ஒரு முறை பயணத்தின் போது விமானம் விபத்துக்குள்ளாகியதால் 'எல்' என்பவர் உயிரிழந்தார். அவரது மனைவி தொழிலாளர் இழப்பீடு சட்டத்தின் படி இழப்பீடு கோரினார். இழப்பீடு கிடைக்குமா என்பதை தகுந்த தீர்ப்புவழிச் சட்டத்துடன் விளக்குக.

9. 'A' and 'B' are two rival companies. Majority of the members of 'A' were also members of 'B'. 'A' commenced a suit against 'B'. At a meeting of 'A' company, the majority passed a resolution to compromise the action favourable to 'B' company and not favourable to 'A' company. Examine the effect of the resolution.

'அ' வும் 'ஆ' வும் இரண்டு போட்டியிடுகின்ற நிறுவனங்கள். 'அ' வின் பெரும்பான்மை உறுப்பினர்கள், 'ஆ' வின் உறுப்பினர்களாகவும் இருந்தனர். 'ஆ' வின் மீது 'அ' ஒரு வழக்கை தொடங்கியது. அவ்வழக்கை 'ஆ' நிறுவனத்திற்கு சாதகமாகவும், 'அ' நிறுவனத்திற்கு பாதகமாகவும் இருக்கும்படியாக ஒரு சமரச முடிவு செய்வதற்கு 'அ' வின் கூட்டம் ஒன்றில் அதன் பெரும்பான்மை உறுப்பினர்கள் தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்கள். இத்தீர்மானத்தின் விளைவுகளை ஆராய்க.

10. Mr. Selvan was appointed as the managing director of the plaintiff company on the condition that "he shall not at any time while he shall hold the office of managing director (or) afterwards solicit (or) entice away the customers of the company". His employment was determined under an agreement. Shortly afterwards he started business in the name of a company which solicited the plaintiff's customers. He was sued for breach of agreement. Decide.

இவ்வழக்கில் செல்வன் என்பவர் வாதி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்பட்டார். அவர் அந்த நிறவனத்தில் பொறுப்பில் இருக்கும் பொழுது அல்லது விலகிய பிறகு நிறுவனத்தின் வாடிக்கையாளர்களைத் தன்னிடம் வரும்படி தூண்டுவதில்லை என்று மேற்படி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். ஆனால் அவர் நிறுவனத்தை விட்டு விலகிய பிறகு வேறொரு நிறுவனம் நிறுவி அதனுடன் தன் முந்தைய நிறுவனத்தின் வாடிக்கையாளர்களைத் தொடர்பு கொள்ளுமாறு தூண்டினார். எனவே ஒப்பந்தத்தை மீறியதாக கூறி அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. முடிவு செய்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 20
LIBRARY

Register No.

FA6C

5397–22

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

LABOUR LAW – I

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define the term "Lock-out" under the Industrial Disputes Act, 1947. Discuss the procedure for lockout with the help of decided cases.

   1947-ம் ஆண்டு தொழில் தகராறு சட்டத்தின் கீழ் "கதவடைப்பு" என்பதை வரையறை செய்து, கதவடைப்பின் நடைமுறைகளை உரிய முன்தீர்ப்புகளுடன் விவரி.

2. Explain the procedure for amalgamation and dissolution of Trade Unions.

   தொழிற்சங்கங்களை ஒருங்கிணைப்பது மற்றும் கலைப்பது குறித்தான நடைமுறைகளை விளக்குக.

3. Explain the concepts of Minimum Wage, Fair Wage and Living Wage and explain the procedure for determining them.

   குறும ஊதியம், நேரிய ஊதியம் மற்றும் வாழ்க்கை ஊதியம் என்பதை விளக்குக. இவை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை கூறுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. State the conditions and procedure prescribed for the registration of a trade union under the Trade Unions Act, 1926.

   1926-ம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டத்தின் கீழ் தொழிற்சங்கங்களை பதிவு செய்வது குறித்த நிபந்தனைகளையும் நடைமுறைகளையும் கூறுக.

5. Discuss the objects of the Payment of Wages Act 1936.

1936-ம் ஆண்டு ஊதிய வழங்கல் சட்டத்தின் நோக்கங்களை விவாதிக்க.

6. Explain the various features incorporated under the Industrial Employment (Standing Orders) Act 1946.

1946-ம் ஆண்டு தொழிலகப் பணிகள் (நிலையாணைகள்) சட்டத்தில் உள்ள பல்வேறு இயல்புகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Retrenchment

ஆட்குறைப்பு

(b) Collective Bargaining

கூட்டுப் பேரம்

(c) Appropriate Government

உரிய அரசு

(d) Wage Board

ஊதிய வாரியம்

(e) Political Fund

அரசியல் நிதி

(f) Inspectors under the Payment of Wages Act, 1936.

1936 ஆம் ஆண்டு ஊதிய வழங்கல் சட்டத்தின் கீழ் ஆய்வாளர்கள்

(g) Works Committee.

பணிக்குழு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Deepak is employed in a Sugar Mill with managerial capacity. He claims to be a workman under the Industrial Disputes Act 1947. Is his claim justified?

தீபக் என்பவர் ஒரு சர்க்கரை ஆலையில் மேலாண்மைப் பணியில் பணிபுரிகின்றார். அவர் 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் தன்னை தொழிலாளராக கருத வேண்டும் எனக் கோருகிறார். அவரது கோரிக்கை நியாயமானதா?

9. In a mill having 100 workers, due to economic crisis the management retrenched 25 workers by giving 3 months notice and retrenchment compensation. The workers challenged the retrenchment – Decide.

100 தொழிலாளர்கள் உள்ள ஒரு ஆலையில் நிருவாகம் பொருளாதார வீழ்ச்சியை காரணம் காட்டி 25 தொழிலாளர்களை 3 மாத அறிவிப்பும், ஆட்குறைப்பு இழப்பீடும் கொடுத்து ஆட்குறைப்பு செய்துவிட்டது. தொழிலாளர்கள் ஆட்குறைப்பை எதிர்க்கிறார்கள். முடிவு செய்க.

10. Suresh is employed in chocolate factory and is paid Rs.6,000/- (six thousand) per month as wages. A sum of Rs.700/- is deducted towards house accommodation, Rs.2,000/- is deducted towards loan borrowed from housing co-operative society, Rs.100/- is deducted towards trade union membership and Rs.1,000/- is deducted as per order of court. Decide the validity of deduction.

சுரேஷ் என்பவர் ஒரு சாக்லெட் ஆக்கத் தொழிலகத்தில் மாதம் ரூ.6,000/- (ஆறு ஆயிரம்) ஊதியமாகப் பெறுகின்றார். வீட்டு வசதிக்காக ரூ.700/-ம், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்க கடனுக்காக ரூ.2,000/-ம், தொழிற்சங்க உறுப்பினர் தொகைக்கு ரூ.100/-ம் மற்றும் நீதிமன்றம் பண வழக்கில் பிறப்பித்த ஆணை அடிப்படையில் ரூ.1,000-ம் பிடித்தம் செய்யப்படுகின்றது. பணப்பிடித்தத்தின் செல்லுந்தன்மை பற்றி முடிவு செய்க.

---